**முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்.**

**முன்னிலை : – திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**

**முதன்மை உதவி அமர்வு நீதிபதி, விழுப்புரம்**

**2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 18ம் நாள் புதன்கிழமை**

**அமர்வு வழக்கு எண்.189/2023**

**(CNR NO: TNVP02-001708-2023)**

(விழுப்புரம், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருமதி.வி. அகிலா,பி.எல்.,எம்.பி.எல்., அவர்களால் முதல்நிலை பதிவேடு வழக்கு எண்.09/2023ன் படி 13.07.2023 தேதியில் மேல்விசாரணைக்காக அனுப்பி வைக்க்பபட்டது).

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசுக்காக | - | காவல் ஆய்வாளர்<br>வளவனூர் காவல் நிலைய<br>குற்ற எண்.21/2012 |
| 2. | ககுற்றம் சாட்டப்பட்டவர்கள் பெயர் வயது, தந்தை பெயரி மற்றும் முகவரி | : | **1. அறிவு (எ) அறிவழகன் (வயது 26)**<br>த/பெ. கந்த உடையார்<br>கீழ்பெரும்பாக்கம், விழுப்புரம்.<br><br>**2. சுரேஷ் (எ) சுக்கு சுரேஷ் (வயது 28)**<br>த/பெ. ராஜேந்திரகவுண்டர்<br>கீழ்பெரும்பாக்கம், விழுப்புரம்.<br><br>**3. மணிகண்டன் (எ) சின்னா (எ) சின்னமணி (வயது 25)**<br>**த/பெ. புருஷோத்தமன்**<br>சின்னையாபுரம், முத்தியால்பேட்டை,<br>பாண்டிச்சேரி.<br><br>**4. சரத் (எ) சரத்ராஜ் (வயது 22)**<br>த/பெ.வீராசாமி<br>எண்.2, ஸ்கூல்தெரு, சோரப்பட்டு காலனி<br>பாண்டிச்சேரி. |

| | | | |
|---|---|---|---|
| 3. | சம்பவ நாள் | : | 03.01.2012 |
| 4. | புகார் நாள் | : | 03.01.2012 |
| 5. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 1வது எதிரி - 10.04.2012<br>2வது எதிரி - 10.04.2012<br>3வது எதிரி - 20.04.2013<br>4வது எதிரி - 05.07.2012 |
| 6. | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | : | 1வது எதிரி - 18.08.2018<br>2வது எதிரி - 12.06.2012<br>3வது எதிரி - 13.06.2013<br>4வது எதிரி - 31.08.2012 |
| 7. | எதிரிகள் மீது காவல்நிலையத்தார் குற்றச்சாட்டுக்கள் | : | 1 முதல் 4 எதிரிகள் இதச 392 உ/இ.34 பிரிவின் கீழ் |
| 8. | எதிரிகள் மீது நீதிமன்றத்தில் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | : | 1 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவு 392 உ/இ.34ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது |
| 9. | எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை |
| 10 | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 01.04.2024 |
| 11. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 06.03.2026 |
| 12. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | 1 முதல் 4 எதிரிகள் இதச பிரிவு 392 உ/இ.34ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் அல்ல. |
| 13. | நீதிமன்றத்தின் தீர்ப்பும், தண்டனையும் | -: | **முடிவாக,** அரசுத்தரப்பு எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களான இதச பிரிவு 392உ/இ.34ன் கீழ் 1 முதல் 4 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து 1 முதல் 4 எதிரிகளை |

| | | | |
|---|---|---|---|
| | | | கு.வி.மு.ச.பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 14. | தீர்ப்பின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நாள் | : | எதிரிகள் விடுதலை செய்யப்பட்டதால் தீர்ப்பின் நகல் வழங்கப்படவில்லை |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை |

இவ்வழக்கு 11.03.2026 இன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.கார்த்திகேயன், அவர்களும், 1 முதல் 4 எதிரிகளின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராமச்சந்திரன், அவர்களும் முன்னிலையாகி ஆற்றிய இருதரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கில் கடந்த 03.01.2012ம் தேதி 1வது சாட்சி கண்ணாயிரம் என்பவர் மாட்டு வியாபாரி ஆவார். இவர் கிராமங்களில் மாடுகளை வாங்கி அவைகளை சந்தைக்கு ஓட்டிச்சென்று அங்கு விற்பனை செய்து வருவது வழக்கம், கடந்த 03.01.2012ம் வழக்கம்போல் 1வது சாட்சி கண்ணாயிரம் தனது உதவியாளர் 2வது சாட்சி பன்னீர் என்பவருடன் மதகடிப்பட்டு கிராமத்தில் நடைபெறும் வாராந்திர சந்தைக்கு தன் மாடுகளை ஓட்டிச்சென்று விற்பனை செய்துவிட்டு மாலை தன் வீட்டிற்கு செல்ல அவருக்கு சொந்தமான டி.வி.எஸ்.ஸ்கூட்டி டி.என்.32.எப்.0684 என்ற வண்டியில் தன் உதவியாளர் பன்னீர் ஓட்ட தான் பின்னால் அமர்ந்துகொண்டு மதகடிப்பட்டிலிருந்து விழுப்புரம் நோக்கி வரும்போது மாலை 6.50 மணியளவில் கெங்கராம்பாளையம் கிராம எல்லையில் அரியாங்குப்பத்தார் தென்னந்தோப்பு அருகில் வரும்போது 1 முதல் 4 எதிரிகள் அவர்களை பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளின் மீது இடித்து அவர்களை கீழே விழச்செய்து 1வது சாட்சி கண்ணாயிரம், 2வது சாட்சி பன்னீர் இவர்களை கைகளால் தாக்கியும், 1வது எதிரி கையில் வைத்திருந்த கத்தியை எடுத்து 1வது சாட்சி கண்ணாயிரத்தை குத்திவிடுவேன் என்று பயமுறுத்தி அவர்

கழுத்தில் அணிந்திருந்த 6 பவுன் தங்க செயின் மற்றும் இடுப்பில் வலைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.20,000/-ம் மற்றும் ஓட்டிவந்த டி.வி.எஸ்.ஸ்கூட்டி இவைகளை கொள்ளையடித்து சென்றுள்ளார்கள். எனவே எதிரிகளின் செய்கையானது இதச பிரிவு 392 உ/இ.34-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார்கள் என வளவனூர் காவல்நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) மேற்படி குற்ற அறிக்கையை பெற்றுக்கொண்ட விழுப்புரம், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, அவர்களால் வழக்கை முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.09/2023 ஆக 06.07.2022 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன் நகல்கள் யாவற்றையும் குவிமுச பிரிவு 207 படி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கியுள்ளார். பின்னர் அவர் ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 392 உ/இ.34-ன் கீழான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதாக கருதி இந்த வழக்கை குவிமுச பிரிவு 209(அ) பிரிவின்படி மாண்புமிகு விழுப்புரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்துக்கு வழக்கு கோப்புகளை சமர்ப்பித்துள்ளார். மேற்படி வழக்கை பெற்றுக்கொண்ட மாண்புமிகு விழுப்புரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி அவர்கள், இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து அமர்வு வழக்கு எண்.189/2023 ஆக கோப்பிற்கு எடுத்து மேல்விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

3) வழக்கு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து இருதரப்பு வாதங்களைக் கேட்டு எதிரிகள் மீது இதச பிரிவு 392 உ/இ.34-ன் படி குற்றச்சாட்டுகள் வனைந்து, எதிரிகளிடம் விளக்கிக்கூறி கேட்க எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள். எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்றும், வழக்கை மேல்நடத்தவேண்டும் என்றும் கூறினார்கள்.

4). அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.25 வரையான சான்று ஆவணங்களும் சா.பொ.1ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை,

சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. மேலும் அரசுத்தரப்பில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாக சொல்லப்படும் சான்றுப்பொருட்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் அரசுத்தரப்பு விசாரணையின்போது குறியீடு செய்யப்படவில்லை.

5). அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சான்றுரை வாயிலாக தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் விவரம் பின்வருமாறு...

அ) அ.சா.1 திரு.சங்கர், தனது முதல் விசாரணை சாட்சியத்தில், தான் சாலையம்பாளையம் கிராமத்தில் வசித்து வருவதாகவும், அரசு பேருந்து ஓட்டுனராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 2012ம் வருடம் தனது உறவினருடன் வளவனூர் காவல்நிலையம் சென்றிருந்தபோது போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒரு கையெழுத்து போட்டு கொடுத்ததாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

ஆ) அ.சா.2. திரு.பாபு, தனது முதல் விசாரணையில், தான் வளவனூர் பிள்ளையார் கோவில் தெருவில் வசித்து வருவதாகவும், தான் சொந்தமாக டாடா ஏசி லாரி வைத்து தொழில் செய்து வருவதாகவும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

இ) அ.சா.3 திரு.பிரகாஷ் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், தான் வளவனூர் ஈஸ்வரன் கோவில் தெருவில் வசித்து வருவதாகவும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், போலிசார் கேட்டதற்காக காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டு கொடுத்ததாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் மணிகண்டன் என்ற ஜின்னா என்கிற சின்னமணி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 என்றும், 30.04.2013 தேதியிட்ட 10.30 மணிக்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும்,

அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.3 என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

ஈ) அ.சா.4 திரு.லோகநாதன், தனது முதல் விசாரணை சாட்சியத்தில், தான் தற்போது வளவனூர் ஈஸ்வரன் கோவில் தெருவில் வசித்து வருவதாகவும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்காக காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டு கொடுத்ததாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் மணிகண்டன் என்ற ஜின்னா என்கிற சின்னமணி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.4 என்றும், 30.04.2013 தேதியிட்ட 10.30 மணிக்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.5 என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

உ) அ.சா.5 திரு.தெய்வசிகாமணி தனது முதல் விசாரணை சாட்சியத்தில், தான் வளவனூரில் வசித்து வருவதாகவும், எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், வழக்கு பற்றிய எந்த விவரமும் தெரியாது என்றும், சுமார் 10 வருடங்களுக்கு முன்பு தான் தனது சொந்த வேலையாக வளவனூர் காவல்நிலையம் சென்றிருந்தபோது ஒரு வழக்கு சம்பந்தமாக ஒரு வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் அறிவு(எ)அறிவழகன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.6 என்றும், 10.04.2012 தேதியிட்ட பகல் 13.30 மணிக்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.7 என்றும், 10.04.2012 தேதியிட்ட பகல் 14.00 மணிக்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.8 என்றும், சுரேஷ்(எ)சுக்கு சுரேஷ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.9 என்றும், 10.04.2012

தேதியிட்ட பகல் 15.15 மணிக்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.10 என்றும், 10.04.2012 தேதியிட்ட பகல் 15.45 மணிக்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.11 என்றும், பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

ஊ) அ.சா.6 திரு.சிவானந்தகுமார், தனது முதல் விசாரணை சாட்சியத்தில், தான் தற்போது காணை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், தான் 03.01.2012ம் ஆண்டு வளவனூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது நிலைய பொறுப்பு அலுவலராக இருந்தபோது கண்ணாயிரம் வயது 55 த/பெ.அப்பாதுரை, நெ.414 கணபதி நகர் விழுப்புரம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று வளவனூர் காவல்நிலைய குற்ற எண்.21/2012 பிரிவு 392 இதசபடி 03.01.2012ம் தேதி 22 மணிக்கு வழக்கு பதிவு செய்ததாகவும், வழக்கு பதிந்தபிறகு அசல் முதல் தகவல் அறிக்கையை புகார் மனுவுடன் விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண்.2 முன்பாக சமர்ப்பித்ததாகவும், வழக்கு கோப்பினை ஆய்வாளரின் பார்வைக்கு மேல் நடவடிக்கைக்காக வைத்ததாகவும், கண்ணாயிரம் என்பவர் கொடுத்த புகார் அ.த.சா.ஆ.12 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.13 என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

எ) அ.சா.7 திரு.ரவி, தனது முதல் விசாரணை சாட்சியத்தில், கடந்த 30.04.2013ம் தேதி வளவனூர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியிலிருந்தபோது 03.01.2012 அன்று இரவு 10.00 மணிக்கு தலைமை காவலர் 518 சிவானந்தகுமார் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது கண்ணாயிரம் என்பவரிடமிருந்து பெறப்பட்ட எழுத்து மூலமான புகாரினை பெற்று இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக வைத்ததை அப்போதைய காவல்நிலைய ஆய்வாளர் திரு.சுகுமார் என்பவர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 04.01.2012 அன்று காலை 8.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் அண்ணாமலை மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர்,

வரைபடம் தயார் செய்திருந்தார் என்றும், அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.14 என்றும், வரைபடம் அ.த.சா.ஆ.15 என்றும், அன்றையதினமே பார்வை மகசர் சாட்சிகளை வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், மேலும் புகார்தாரர் கண்ணாயிரம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளர் என்றும், பின்னர் அவர் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் அவருக்கு பின் கண்டமங்கலம் காவல் ஆய்வாளர் (பொறுப்பு) வளவனூர் திரு.நடராஜன் அவர்கள் இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 10.04.2012 அன்று காலை 11.00 மணிக்கு கோலியனூர் கூட்ரோட்டில் வைத்து வழக்கின் எதிரி அறிவு(எ)அறிவழகன், சுரேஷ்(எ)சக்குசுரேஷ் என்பவரையும் கைதுக்கான காரணம் கூறி கைது செய்தபோது எதிரி அறிவு(எ)அறிவழகன் மற்றும் சுரேஷ்(எ)சக்கு சுரேஷ் என்பவர்கள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தெய்வசிகாமணி மற்றும் ரியாஸ் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார் என்றும், அறிவு (எ) அறிவழகன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூல தகவல் அ.த.சா.ஆ.16 என்றும், சுரேஷ்(எ)சக்கு சுரேஷ் ஒப்புதல் வாக்குமூல தகவல் அ.த.சா.ஆ.17 என்றும், அறிவு(எ)அறிவழகன் கொடுத்த தகவலின்படி அதே சாட்சிகள் முன்பு 10.04.2012 பகல் 13.30 மணிக்கு கோலியனூர் ரயில்வேகேட் அருகே எடுத்து ஆஜர் செய்த சுமார் 48 கிராம் எடையுள்ள தங்க சங்கிலியை 10.04.2012 அன்று பகல் 13.30 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் அ.த.சா.ஆ.18ல் கைப்பற்றியுள்ளார் எனள்றும், மேலும் எதிரி அறிவு(எ)அறிவழகன் ஆஜர்படுத்திய கண்டமங்கலம் காவல்நிலைய குற்ற எண்.54/2012 பிரிவு 392 இதச வழக்கில் சம்பந்தப்பட்ட 4 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்றினை கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.19ல் அதே சாட்சிகள் முன்பு கைப்பற்றியுள்ளார் என்றும், அதன்பிறகு எதிரி சுரேஷ(எ)சக்குசுரேஷ் 10.04.2012 15.15 மணிக்கு கீழ்பெரும்பாக்கம் ஔவையார் கோவில் தெருவில் அவர் வீட்டு முன்பு ஆஜர் செய்த விழுப்புரம் தாலுக்கா காவல்நிலைய குற்ற எண்.23/12 பிரிவு 392 இதச வழக்கில் சம்பந்தப்பட்ட 64 கிராம் தங்க தாலிசரடு ஒன்றினை கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.20ல் அதே சாட்சிகள் முன்பு கைப்பற்றியுள்ளார் என்றும், அதன்பிறகு 10.04.2012 15.45 மணிக்கு எதிரி அறிவு(எ)அறிவழகன் கீழ்பெரும்பாக்கம் திரௌபதி அம்மன் கோவில் தெருவில் உள்ள அவரது வீட்டு முன்பிருந்து விழுப்புரம் தாலுக்கா காவல்நிலைய குற்ற எண்.38/2012 பிரிவு 392 இதச

வழக்கில் சம்பந்தப்பட்ட 56 கிராம் எடையுள்ள தங்கதாலி சரடு ஒன்றினை அ.த.சா.ஆ.21ல் கைப்பற்றியுள்ளார் என்றும், எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார் என்றும், 48 கிராம் தங்கசங்கிலி இந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்டது என்பதால் பாரம் 91ல் ஒப்படைத்து சி.பி.114/2012 நாள் 11.05.2012ல் பெற்றுள்ளார் என்றும், அந்த பாரம் 91 அ.த.சா.ஆ.22 என்றும், அந்த தங்கச்சங்கிலி சி.எம்.பி.1926/2012 நாள் 15.05.2012 உத்தரவுபடி மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், புகார்தாரர் இறப்பின் காரணமாக இந்த வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்றும், அதனால் அந்த தங்கச்சங்கிலி ஆஜர்படுத்தி சான்றுபொருளாக குறியீடு செய்யவில்லை என்றும், இந்த வழக்கில் வேறு வழக்கு சம்பந்தமாக எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்க நகைகள் அதற்குரிய புலன்விசாரணை அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்படைத்துள்ளார் என்றும், மேலும் இந்த வழக்கில் சாட்சிகள் பாபு, சுப்ரமணி, சங்கர், பன்னீர், அண்ணாமலை, கண்ணாயிரம், தெய்வசிகாமணி, ரியாஸ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருந்தார் என்றும், பிறகு வளவனூர் காவல்நிலைய காவல் ஆய்வாளாராக தான் பொறுப்பேற்ற பிறகு 30.04.2013 அன்று இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி மணிகண்டன் (எ) சின்னா(எ) சின்னமணி என்பவர் வேறு ஒரு வழக்கில் புதுச்சேரி மாநிலம் காலாப்பட்டு சிறையில் இருந்தவரை இந்த வழக்கில் விசாரணைக்காக வேண்டி விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களிடம் மனு தாக்கல் செய்து போலிஸ் காவலில் எடுத்து வளவனூர் காவல்நிலைய குற்றப்பிரிவு அறையில் சாட்சிகள் பிரகாஷ், லோகநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 7.00 மணிக்கு விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அவரது ஒப்புதல் வாக்குமூலம தகவல் அ.த.சா.ஆ.23ன்படி 30.04.2013 பகல் 10.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்பு புதுச்சேரி மாநிலம் சின்னையாபுரம் முத்தையால்பேட்டையில் உள்ள எதிரி மணிகண்டன் வீட்டின் பின்னால் இருந்து அவர் எடுத்து ஆஜர் செய்த நீலம், கருப்பு கலந்த டி.வி.எஸ். ஸ்கூட்டி வண்டி எண்.டி.என்.32.எப்.0684 என்ற வண்டியினை கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.24ன் அதே சாட்சிகள் முன்பு கைப்பற்றியதாகவும, நீலம், கருப்பு, டி.வி.எஸ்.ஸ்கூட்டி வண்டி எண்.டி.என்.32எப்-0684ஐ போலிஸ் காவலில் இருந்து இன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளது அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும்,

பின்பு எதிரி மணிகண்டன் என்பவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், கைப்பற்றிய சான்றுபொருளை நீதிமன்ற அனுப்பி சி.பி.175/2013 பெற்று நீதிமன்ற உத்தரவுபடி அந்த வண்டியை போலிஸ் காவலில் பெற்று காவல்நிலையத்தில் வைக்கப்பட்டது என்றும், பாரம் 91 அ.த.சா.ஆ.25 என்றும், பிறகு எதிரி மணிகண்டன் கொடுத்த தகவலின்படி இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சாத்து(எ)சரத்ராஜ் என்பவரை இந்த வழக்கில் கைது செய்ய நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதாகவும், அதன்பிறகு வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவு 392 உ/இ.34ல் எதிரிகள் அறிவு (எ) அறிவழகன், சுரேஷ்(எ)சுக்குசுரேஷ், மணிகண்டன்(எ)சின்னா(எ)சின்னமணி, மற்றும் சரத் (எ)சரத்ராஜ் ஆகியோர்கள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

6). அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சியங்கள் அனைத்தும் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

7). அ.சா.7ன் சாட்சியத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவிய போது அந்த சாட்சிய விபரங்களை மறுத்து பொய் சாட்சி என்றும் பொய் வழக்கு என்று கூறி குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள். அவர்கள் தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்று கூறினார்கள்.

8). இருதரப்பு வாய்மொழி சாட்சியம் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரைகளையும் ஆய்வு செய்ததில் எதிரிகளின் மீது இதச பிரிவு 392உ/இ.34ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பவே தீர்வுக்குரிய பிரச்சினை ஆகும்.

9). **<u>தீர்வு காணவேண்டிய பிரச்சினை</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

10). அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் கடந்த 03.01.2012ம் தேதி 1வது சாட்சி கண்ணாயிரம் என்பவர் மாட்டு வியாபாரி ஆவார். இவர் கிராமங்களில் மாடுகளை வாங்கி அவைகளை சந்தைக்கு ஓட்டிச்சென்று அங்கு விற்பனை செய்து வருவது வழக்கம், கடந்த 03.01.2012ம் வழக்கம்போல் 1வது சாட்சி கண்ணாயிரம் தனது உதவியாளர் 2வது சாட்சி பன்னீர் என்பவருடன் மதகடிப்பட்டு கிராமத்தில் நடைபெறும் வாராந்திர சந்தைக்கு தன் மாடுகளை ஓட்டிச்சென்று விற்பனை செய்துவிட்டு மாலை தன் வீட்டிற்கு செல்ல அவருக்கு சொந்தமான டி.வி.எஸ்.ஸ்கூட்டி டி.என்.32.எப்.0684 என்ற வண்டியில் தன் உதவியாளர் பன்னீர் ஓட்ட தான் பின்னால் அமர்ந்துகொண்டு மதகடிப்பட்டிலிருந்து விழுப்புரம் நோக்கி வரும்போது மாலை 6.50 மணியளவில் கெங்கராம்பாளையம் கிராம எல்லையில் அரியாங்குப்பத்தார் தென்னந்தோப்பு அருகில் வரும்போது 1 முதல் 4 எதிரிகள் அவர்களை பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளின் மீது இடித்து அவர்களை கீழே விழச்செய்து 1வது சாட்சி கண்ணாயிரம், 2வது சாட்சி பன்னீர் இவர்களை கைகளால் தாக்கியும், 1வது எதிரி கையில் வைத்திருந்த கத்தியை எடுத்து 1வது சாட்சி கண்ணாயிரத்தை குத்திவிடுவேன் என்று பயமுறுத்தி அவர் கழுத்தில் அணிந்திருந்த 6 பவுன் தங்க செயின் மற்றும் இடுப்பில் வலைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.20,000/-ம் மற்றும் ஓட்டிவந்த டி.வி.எஸ்.ஸ்கூட்டி இவைகளை கொள்ளையடித்து சென்றுள்ளதால் எதிரிகளின் செய்கையானது இதச பிரிவு 392 உ/இ.34-ன் கீழ் கொள்ளையடித்து சென்றுள்ளார்கள் என வாதிட்டார்.

11). எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் அவர்கள் எதிரிகள் மேற்படி செயலை செய்யவில்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

12). இவ்வழக்கின் பார்வை மகசர் சாட்சியான அ.சா.1 திரு.சங்கர், கடந்த 2012ம் வருடம் தனது உறவினருடன் வளவனூர் காவல்நிலையம் சென்றிருந்தபோது போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒரு கையெழுத்து போட்டு கொடுத்ததாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 பார்வை மகசரில் உள்ள கையெழுத்து மட்டும்தான் தன்னுடையது என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து போட்டுக்கொடுத்ததாகவும், அதில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்று கூறியுள்ளார். இவர் அரசுத்தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

13). மேலும் இவ்வழக்கில் சம்பவ சாட்சியான அ.சா.2 திரு.பாபு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று அரசுத்தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். இவரின் சாட்சியம் அரசுத்தரப்பிற்கு உதவுவதாக அமையவில்லை.

14). அ.சா.3 திரு.பிரகாஷ், அ.சா.4 திரு. லோகநாதன், அ.சா.5 திரு.தெய்வசிகாமணி ஆகியோர்கள் ஒப்புதல் வாக்குமூலம், பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.2 முதல் அ.த.சா.ஆ.11 வரை சாட்சி கையொப்பமிட்ட சாட்சிகளாவார்கள். அ.சா.3 முதல் அ.சா.5 வரையான சாட்சிகள் தங்களது சாட்சியங்களில் வழக்கு சம்பந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க வெள்ளை பேப்பரில் கையெழுத்திட்டு கொடுத்ததாகவும், எதற்காக தாங்கள் கையொப்பம் போட்டோம் என்று தங்களுக்கே தெரியாது என்றும், போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும், அரசுத்தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள்.

15). எனவே அ.சா.1 முதல் அ.சா.5ன் சாட்சியங்கள் முன்னுக்குப்பின் முரணாக இருப்பதால் மேற்படி சாட்சியங்கள் அரசுத்தரப்பிற்கு உதவுவதாக அமையவில்லை.

16). மேலும் அரசுத்தரப்பில் 1 முதல் 6 வரையான சாட்சியங்கள் இந்த வழக்கு சம்பவம் பற்றி தங்களுக்கு தெரியாது என்று எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாகியுள்ளார்கள். மேலும் சம்பவ சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவருமே முன்னுக்குப்பின் முரணாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி சம்பவம் நடந்ததா என்பது பற்றி சந்தேகம் எழுகிறது. எனவே அரசுத்தரப்பு, எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கை நிரூபிக்க முற்றிலும் தவறிவிட்டது என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

17). அ.சா.6 திரு. சிவானந்தகுமார், அ.சா.8. திரு.ரவி ஆகியோர்கள் காவல் உதவி ஆய்வாளர்கள் ஆவார்கள். அ.த.சா.ஆ.12 புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை புகார் மனுவுடன் இணைத்து விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், வழக்கு கோப்பினை ஆய்வாளரின் பார்வைக்கு வைத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார். ஆய்வாளர் எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது உடன் இருந்ததாகவும், சான்றுபொருட்களை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றும்போது உடன் இருந்ததாகவும் கூறியுள்ளார்.

18). அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், வளவனூர் காவல்நிலையத்திற்கும் இடையே சுமார் 4 முதல் 5 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால் சரிதான் என்றும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பிரதான போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான் என்றும், சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு அதிகபட்சமாக 30 நிமிடத்தில் வந்துவிட முடியும் என்றால் சரிதான். புகார்தாரர் சுமார் 4.00 மணி நேரம் காலதாமதமாக காவல்நிலையம் வந்து புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். புகார் பெறப்பட்டதாக சொல்லப்படும் நேரம் இடைச்செருகலாகத்தான் 22 மணி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் வழக்கின் எதிரிகள் பெயரை குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான், புகார்தாரர் புகாரில் நகையின் அடையாளம் மற்றும் பணத்தின் விவரம் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான் என்று கூறியுள்ளார்.

19). அ.சா.7 திரு.ரவி, காவல் ஆய்வாளர் அவர்கள் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி ஆவார். இவர் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததை பார்வையிட்டு சம்பவ சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்து, சான்று பொருள் குறியீடு செய்து கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

20). மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட புகார்தாரர் கண்ணாயிரம், வழக்கு சொத்தை அடையாளம் காட்டிய சாட்சியான திரு.பன்னீர், இருவரும் இறந்துவிட்டார்கள் என்பது தெரியவருகிறது. மேலும் சம்பவ சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவருமே மேற்படி சம்பவம் பற்றி எதுவுமே தெரியாது என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி கையொப்பமிட்டதாகவும் கூறியுள்ளார்கள். மேலும் அ.சா.5 மற்றும் அ.சா.6 காவல் சாட்சியங்களுக்கு ஆதரவாக எந்தவொரு தனிப்பட்ட சாட்சியும் சம்பவம் நடந்தது பற்றி சாட்சியம் அளிக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பிரதான போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்பதால் தனிநபர் சாட்சிகள் யாரும் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் முதல் தகவல் அறிக்கையும் 4 மணி நேரம் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி புகாரில் வழக்கின் எதிரிகள் பெயரை குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.6 சாட்சியம் அளித்துள்ளார். எனவே இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்குமா என்று சந்தேகம் எழுகிறது. மேலும் இவ்வழக்கில் ஈடுபட்ட எதிரிகள் சம்பந்தமாக நேரடியான சாட்சிகள் எதுவும் இல்லை என்பதாலும், அரசுத்தரப்பிற்கு ஆதரவான காவல்துறை சாட்சியத்தினை மட்டுமே வைத்து எதிரிகளை சந்தேகிப்பது இவ்வழக்கிற்கு ஏதுவாக இருக்காது என்பதாலும், இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்குமா என்ற சந்தேகத்தின் அடிப்படையில், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவித்து இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**முடிவாக,** அரசுத்தரப்பு எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களான இதச பிரிவு 392உ/இ.34ன் கீழ் 1 முதல் 4 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து 1 முதல் 4 எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

சா.பொ.1 - நீலம் கருப்பு கலந்த TVS Scooty TN-32F-0684 (காவல்நிலைய பொறுப்பில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளதை) இருசக்கர வாகனத்தை உரிய நடவடிக்கை எடுத்து உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரிகள் விசாரணை காலத்தில் எழுதி கொடுத்திருந்த ஜாமின் பத்திரத்தை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. அதன் விளைவாக ஜாமின்தாரர்கள் விடுவிப்பு செய்து உத்தரவிடப்படுகிறது.

கு.வி.மு.ச பிரிவு 437 - A தேவைக்கேற்ப புதிய ஜாமின் பத்திரத்தை ரூ.10,000/-க்கு நிறைவேற்றுமாறு குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

கு.வி.மு.ச. பிரிவு 437 - Aன் படி குற்றம் சாட்டப்பட்ட எதிரிகளிடம் இருந்த தனிப்பட்ட பத்திரத்தை (Personal bond) பெறுமாறு இந்த நீதிமன்ற அலுவலகத்திற்கு உத்தரவிடப்படுகிறது. அந்த தனிப்பட்ட பத்திரம் (Personal bond) 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 18ம் நாள் புதன்கிழமை அவையறிய தீர்ப்பு பகரப்பட்டது.

A TAMILSELVAN

Digitally signed by A TAMILSELVAN
Date: 2026.03.18 15:45:47 +0530

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
விழுப்புரம்.

**அரசு தரப்பு சாட்சிகள் :-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. சங்கர் த/பெ. ஜெயராமன் |
| அ.சா.2 | திரு. பாபு த/பெ. சுந்தரமூர்த்தி |
| அ.சா.3 | திரு. பிரகாஷ் த/பெ. தங்கராசு |
| அ.சா.4 | திரு. லோகநாதன் த/பெ. சந்திரகாசு |
| அ.சா.5 | திரு. தெய்வசிகாமணி த/பெ. நாகமுத்து |

அ.சா.6 திரு. சிவானந்தகுமார் த/பெ. வேணுகோபால்

அ.சா.7 திரு. ரவி த/பெ. ராமகிருஷ்ணன்

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | பார்வை மகசரில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.2 | 3வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.3ன் சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.3ன் சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.4 | 3வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4ன் சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.4ன் சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.6 | 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.5ன் சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.7 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.5ன் சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.8 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.5ன் சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.9 | 2வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.5ன் சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.10 | 15.15 மணிக்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.5ன் சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.11 | 15.45 மணிக்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.5ன் சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.12 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.13 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.14 | பார்வை மகசர் |
| அ.த.சா.ஆ.15 | வரைபடம் |
| அ.த.சா.ஆ.16 | 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.த.சா.ஆ.17 | 2வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.த.சா.ஆ.18 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.த.சா.ஆ.19 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.த.சா.ஆ.20 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.த.சா.ஆ.21 | கைப்பற்றுதல் மகசர் |

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.22 | படிவம் 91 |
| அ.த.சா.ஆ.23 | 3வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.த.சா.ஆ.24 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.த.சா.ஆ.25 | படிவம் 91 |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: -**

சா.பொ.1 நீலம் கருப்பு கலந்த TVS Scooty TN-32F-0684

**எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுப் பொருள்:-**

இல்லை.

A TAMILSELVAN
Digitally signed by A TAMILSELVAN
Date: 2026.03.18 15:45:37 +0530

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
விழுப்புரம்.